**அசல் வழக்கு எண். 172/18 வா.சா. 1 கருப்பையா த/பெ. சீனிவாசன்**

**தேதி 24.11.2022**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. சர்வே எண். 852/3 க்கு கிழக்கே புல எண் 852/30 உள்ளது என்றால் சரிதான். சர்வேஎண் 852/30 என்பதற்கு கிழக்கே 852/34 உள்ளது என்றால் சர்வே எண் தெரியவில்லை கிழக்கே நத்தம் புறம்போக்கு நிலம் உள்ளது. சுப்பிரமணியன் என்பவர் வழக்கு சொத்திற்கு வடக்கே உள்ள புல எண் 852/29 ஐ அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல எனக்கு பட்டா அளிக்கும்போது அது புறம்போக்காக இருந்தது. புலஎண். 852/29 ல் கண்டுள்ள நிலத்தினை சுப்பிரமணியன் என்பவர் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. பிரதிவாதி செல்வராஜ் அதில் வீடுகட்ட ஆரம்பித்துள்ளார். வழக்கு சொத்திற்கு மேற்கே புல எண் 852/3 உள்ளது. புலஎண் 852/29 க்கு மேற்கே புலஎண். 852/2 உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல எண் 852/2 ல் சுப்பிரமணியன் என்பவரது வீடு உள்ளது என்றால் 852/29 க்கு வடக்கே சுப்பிரமணியனின் வீடு உள்ளது. புல எண் 852/28 ல் கண்டுள்ள நிலத்தினை செல்லம் என்பவர் வீடுகட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் செல்லம் என்ற நபரை பற்றி எனக்கு தெரியாது.

2. பிரதிவாதி செல்வராஜ் வீட்டிற்கு தெற்கே புல எண் 852/4 உள்ளது என்றால் சரிதான் அது எனது தாயார் பொன்னம்மாளின் இடம் ஆகும். பிரதிவாதி செல்வராஜ் வீட்டிற்கு வடக்கே சுப்பிரமணியன் என்பவரது வீடு உள்ளது என்றால் சரிதான். புல எண் 852/31 இடத்திற்கு எனது தாயார் பொன்னம்மாளின் பெயரில் பட்டா உள்ளது. புல எண் 852/31 இடத்திற்கு கிழக்கே உள்ள இடம் எங்களது அனுபவத்தில் உள்ளது. புல எண் 852/31 க்கு கிழக்கே உள்ள இடம் புல எண் 852/34 என்றால் அது நத்தம் புறம்போக்காக உள்ளது. சுப்பிரமணியனின் வீட்டிற்கு வடக்கே செல்வம் என்பவரது வீடு உள்ளது. செல்வம் வீட்டிற்கு கிழக்கே உள்ள இடத்தினை செல்வம் என்பவர் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வேறு ஒருவர் அனுபவம் செய்து வருகிறார். தற்போது சாட்சி தானாக முன்வந்து செல்வம் வீட்டிற்கு கிழக்கே புறம்போக்கு இடம் உள்ளது அதனை செல்வம் அனுபவம் செய்து வருகிறார் என சாட்சியம் அளிக்கிறார்.

3. பிரதிவாதி செல்வராஜ் கட்டிடம் கட்டுவதை தடுப்பதற்காகத்தான் இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் நான் பலமுறை இடத்தை அளப்பதற்கு செல்வராஜிடம் கேட்டபோது அவர் மறுத்து கட்டிடம் கட்ட முயற்சி செய்யவே வழக்கு தாக்கல் செய்தேன். பிரதிவாதி செல்வராஜ் தனது வீட்டிற்கு அடித்தளம் கட்ட முயற்சித்தபோது நான் தடுத்து வழக்கு தாக்கல்

செய்தேன். ஆனால் பிரதிவாதி அடித்தளம் அமைத்துவிட்டார் என்றால் சரிதான். அதன்பின்னர் பிரதிவாதி செல்வராஜ் அடித்தளத்தின்மீது செங்கற்கள் வைத்து கட்டுமானம் செய்து தரைதளம் வரை வந்து அதில் பில்லர் எழுப்பிய நிலையிலேயே நின்றுவிட்டது என்றால் சரிதான். பிரதிவாதி பில்லர் எழும்பும்போது நான் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல அவர்தான் புகாரளித்தார். காவல்நிலையத்தில் விசாரணையின்போது உரிமையியல் பிரச்சனை என்பதால் நீதிமன்றத்தில் தீர்வுகாணும்படி சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

4. வழக்கு சொத்தில் பிரதிவாதி கட்டிடம் கட்டுவதை நான் தடுத்ததற்கு காரணம் என்னவென்றால் என்னுடையபேரில் பட்டா உள்ள இடத்திலும் சேர்த்து கட்டிடம் கட்ட முயற்சித்ததால்தான் தடுத்தேன். புல எண் 852/3 லுள்ள ஓட்டுக்கட்டிடத்தின் வடகிழக்கில் பிரதிவாதி புதிதாக கட்டிவரும் கட்டிடத்தின் பகுதி உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு வடக்கே பிரதிவாதி கட்டிடம் கட்டுவதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இடம் தொடர்பான பிரச்சனையை 29.05.2016 ம்தேதி எங்கள் ஊரிலுள்ள பெரியவர்கள் நாகேந்திரன், தங்கராஜ், முருகையா, கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் நானும் பிரதிவாதியும் பேச்சுவார்த்தை நடத்தி அதில் சம்மத ஸ்டேட்மெண்ட் ஆவணம் ஒன்று ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தின் நகல்தான் மேற்படி பேச்சுவார்த்தையின்போது ஏற்படுத்திய ஆவணம் ஆகும். அதன் அசல் என்னிடம் உள்ளது. மேற்படி ஆவணத்தின் நகலில் என்னுடைய கையொப்பம் காணப்படுகிறது. 29.05.2016 ம்தேதி ஏற்படுத்தப்பட்ட சம்மத ஸ்டேட்மெண்ட் ஆவணத்தின் நகல் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. சம்மத ஸ்டேட்மெண்ட் ஆவணத்தில் அவரவர்கள் பட்டாவில் கண்ட இடத்தை அவரவர்கள் அனுபவதித்துகொள்ளவும் மற்றும் அவரவர்களுக்கு உள்ள இடத்தில் நேர்பின் புறம்போக்கு இடங்களை அவரவர்கள் மட்டும் அனுபவதித்துகொள்ள சம்மதித்து இந்த சம்மத ஸ்டேட்மெண்ட் பத்திரம் எழுதிக்கொள்ளப்பட்டதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்களை சாட்சியாக அழைத்து விசாரணை செய்ய உங்கள் தரப்பில் தயாராக உள்ளீர்களா என்றால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நபர்கள் தற்போது பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்படுகின்றனர். பஞ்சாயத்தார்கள் நடுநிலையோடு செயல்படுகிறார்கள் என்றும் அவர்களை சாட்சியாக அழைத்தால் உண்மையை கூறிவிடுவார்கள் என்பதால் அவர்கள் பிரதிவாதிக்கு ஆதரவாக செயல்படுகிறார்கள் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. எங்களது கிராமத்தை சேர்ந்த நபர்கள் சுமார் 100 பேர் சேர்ந்து வட்டாட்சியருக்கு கொடுத்த மனுவில் வழக்கு சொத்து பிரதிவாதியின் அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல எங்களது அனுபவத்தில்தான் வழக்கு சொத்து உள்ளது. எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்கள் தவிர வேறு ஆவணங்கள் எதுவும் வழக்கு சொத்து தொடர்பாக என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. எந்த வகையான வேறு ஆவணம் உள்ளது என்றால் வீட்டுவரிரசீது மற்றும் மேற்படி பேச்சுவார்த்தையின்போது எழுதப்பட்ட சம்மதஸ்டேட்மெண்ட் ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது. வழக்கு சொத்தில் பிரதிவாதி கட்டியுள்ள வீடு தவிர வேறு என்னென்ன உள்ளது என்றால் எங்களுடைய பூவரச மரம், வாழைமரம், குளியலறை மற்றும் பொருட்கள் வைப்பதற்காக ஆஸ்பெட்டாஸ் கொட்டகை ஆகியன உள்ளது அதில் குப்பை மற்றும் விறகு ஆகியவற்றையும் போட்டுவைத்துள்ளோம். மேற்படி மரம், குளியலறை, கொட்டகை, குப்பைக்குழி ஆகியன பிரதிவாதிக்கு சொந்தம் என்றால் சரியல்ல.

7. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண் 852/30 என்பது திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் வலப்பக்கத்தில் எழுதப்பட்டுள்ள 30 என்ற எண்ணும் திருத்தப்பட்டுள்ளது என்றால் திருத்தம் செய்துதான் 30 என்று எழுதப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தின் மேற்பகுதியில் நிமு.ம.ஒ.த எண் 39/1417 என்பதில் 39/1417 என்பது ஒயிட்னர் வைத்து அழித்து அதன்மீது எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் 18.08.2003 அன்றும் வா.சா.ஆ.2 ஆவணம் 06.09.2007 அன்றும் வழங்கப்பட்டது. வா.சா.ஆ.1 , வா.சா.ஆ.2 ஆகிய இரண்டு ஆவணங்களும் நில ஒப்படைவு ஆவணங்கள் என்றால் சரிதான். ஒரு நபருக்கு ஒருமுறைதான் நில ஒப்படைவு ஆவணம் வழங்கப்படும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8. 18.08.2003 அன்று வா.சா.ஆ.1 ஆவணம் வழங்கப்பட்ட பிறகு வா.சா.ஆ.2 தவிர வழக்கு சொத்து தொடர்பாக வேறு ஆவணங்கள் எதுவும் எனது பெயரில் ஏற்படவில்லை என்றால் வா.சா.ஆ.2 ஆவணத்துடன் சேர்த்து வா.சா.ஆ.3 வரைபடமும் கொடுத்தார்கள். வேறு வருவாய் ஆவணங்கள் எதுவும் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்கள் வருவாய்துறைக்கு நான் கொடுத்த தவறான தகவலின்பேரில் பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2 ஆவணங்கள் பொய்யாக ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்பதால்தான் அதன்தொடர்ச்சியாக இதுவரை வேறு வருவாய் ஆவணங்கள் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து

நத்தமனையிடம் அதன் கைப்பற்றுகையிலும் அனுபவத்திலும் பிரதிவாதின் தான் உள்ளார் என்றாலும் வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.

9. வழக்கு சொத்தில் பிரதிவாதி கட்டிடம் எழுப்பி அனுபவம் செய்துவருகிறார் என்பதால் நான் கோரியுள்ள நிரந்தர தடையாணை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடிசெய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. நான் எங்கள் ஊரிலுள்ள பஞ்சாயத்தார்கள் மற்றும் பெரியவர்களின் பேச்சினை கேட்பதில்லை என்றால் சரியல்ல. நான் பிரதிவாதி கட்டிவரும் வீட்டினை மேலும் கட்டாமல் தடுத்து அவருக்கு இழப்பு ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக இந்த வழக்கினை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் கூறியுள்ள நான்கெல்லை, அளவு ஆகியன தவறு என்றால் சரியல்ல.